1789ம் ஆண்டு டாக்டர் யோன் ஐயரோடு தரங்கம்பாடி சென்று படித்தார். பின் சுவார்ட்ஸ் ஐயர் வேதநாயகத்தை ஆசிரியராக அமர்த்தினார். அவர் தம் மக்களுக்கு வேத சாஸ்திரத்தையும் உலக ஞான நூல்களையும் கணிதத்தையும் கற்பித்தார்.

**வேத நாயக சாஸ்திரியார் ஊழியம்**

இவரிடத்தில் படித்தவர்களில் ஐந்து பேர் குருப்பட்டம் பெற்றனர். மேல் நாட்டு குருமார்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தார். இவருக்கும் பாடுகிற வரம் இருந்தபடியால் இராப்பகலாய் முயற்சி செய்து தன்னுடைய இருபதாம் வயது முதல் சபைக்கும் பள்ளிகளுக்கும் உதவியான சிறிதும் பெரிதுமான நூற்றிருபது புத்தகங்களை சாஸ்திர முறையாக உண்டு பண்ணி, கிறிஸ்தவ உபதேசங்களையெல்லாம் வேத வழுவின்றி கர்த்தருடைய சகல பண்டிகை நாட்களிலும், சபையில் ஞானஸ்தானம், திருமணம் முதலிய மகிழ்ச்சியின் நாட்களிலும் சில மாணாக்கருடைய உதவியோடு பாடி வருகின்ற வழக்கத்தை உண்டு பண்ணினார்.

**சாஸ்திரியார் பெற்ற பட்டங்கள்**

வேதநாயக சாஸ்திரியாருக்குத் திருச்சபையாரால் 1838-ம் ஆண்டு ‘‘வேத சிரோன்மணி மகா ஞான கவிச்சக்கரவர்த்தி’’ என்று பட்டம் சூடப்பட்டது. தரங்கம்பாடி சபையார் ‘‘சுவிசேடக் கவிராயர்’’ என்ற பட்டம் கொடுத்து பல்லக்கிலேற்றி பட்டணப் பிரவேசம் பண்ணி வைத்தனர்.

1809-ம் ஆண்டு சென்னைப் பட்டணத்துச் சபையார் சதுர்வைத்து பெத்லகேம் குறவஞ்சி அரங்கேற்றம் ‘‘கேட்டு ஞானதீபக் கவிராயர்’’ என்ற பட்டமும் நற்சாட்சி பத்திரமும் கொடுத்து கௌரவித்தனர். திருச்சி சபையார் வெகு விமரிசையாக விழா வைத்து ‘‘வேதநாயக சாஸ்திரியார்’’ என்ற பட்டமளித்தனர். இப்பட்டம் அவரது முதுமையின் கால மட்டும் நிலைத்தது.

**சரபோஜி மாமன்னரோடு தொடர்பு**

தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னருக்கு வாழ்த்துதல் பாடி அவரைக் கண்டு கொண்டார். அவரும் இவருக்கு மரியாதை செய்து, தம் அருகில் அமரச் செய்து சால்வை போர்த்தி, ஒரு வெள்ளை அங்கியையும் கொடுத்து மாதச் சம்பளமும் கொடுக்க ஒழுங்கு செய்தார். மாதத்தில் இரண்டு நாட்கள் அவரைக் கண்டு தம் பாடல்களை அவருக்குப் பாடி காட்டுவார். உரையாடல்களும் நடந்தது. சாஸ்திரியார் யாவரையும் தம் மதத்திற்கு இழுத்து விடுவாரோ என்ற அச்சம் மன்னருக்கு ஏற்பட்டதால், ‘‘நீ என்னிடம் சம்பளம் வாங்குகிறாய்…’’ என்று சற்று கடுமையாகக் கூறக் கேட்ட சாஸ்திரியார் மிகவும் மனம் வருந்தி மன்னர் கொடுத்த பரிசுப் பொருள் நூறுவராகனையும் திருப்பி அனுப்ப எண்ணினார். பின் அரசனின் மந்திரி அவரைச் சமாதானப்படுத்தினார். மன்னருக்கும் சாஸ்திரியாருக்குமிடையே நடந்த உரையாடல்கள்

சாஸ்திரியாருக்கு கிறிஸ்துவின் மேல் இருந்த விசுவாச உறுதியை வெளிப்படுத்துகின்றன. இப்படி இருந்தும் மதிப்பிற்குரிய சரபோஜி மகாராஜா சாஸ்தியாரை மிகவும் பட்சமாக ஆதரித்து நடத்தி வந்தார்.

சங்கை வேதநாயக சாஸ்திரியார் எழுதியுள்ள நூல்கள் 140 என்பது குறிப்பிடத்தக்கது. திருச்சியில் பேராயராக இருந்த பிஷப் ஹீபர், "பதகீர்த்தனம்", "செபமாலை" என்ற இரண்டு புத்தகங்களை 55 ரூபாயை மகிழ்வுடன் கொடுத்து லண்டன் மாநகரின் புத்தகச் சாலையில் வைப்பதற்காக வாங்கிக் கொண்டு சென்றார்.

சாஸ்திரியார் இயற்றிய நூல்களும் பாடல்களும் அவருக்கு நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் கொண்டிருந்த ஆழமான அன்பையும் உறுதியான விசவாசத்தையும் வெளிப்படுத்துகின்றன.

அவருக்கு 91 வயதான போது 1864 ஜனவரி 24-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை வீட்டிலுள்ள யாவருக்கும் ஆசீர்வாதம் கூறியபின் கூடியவர்கள் பாடி பிரார்த்தனை செய்து கொண்டிருக்க தன் இரட்சகருடைய கையிலே தன் ஆத்துமத்தை ஒப்புக்கொடுத்து தன் ஓட்டத்தை முடித்தார்.

பல தமிழ் திருச்சபைகளில் தற்போது உபயோகத்திலுள்ள பாட்டு புத்தகங்களில் சாஸ்திரியாரது பாடல்கள் குறைந்தது 70 கீர்த்தனைகளாவது உள்ளன. அவற்றுள் மக்கள் அதிகமாக விரும்பி அடிக்கடி பாடும் 16 கீர்த்தனைகள் பின் வருமாறு:

1. ஆகமங்கள் புகழ் வேதா நமோ நமோ
2. பாடித்துதி மனமே....
3. ஆதித் திருவார்த்தை திவ்ய அற்புத பாலகனாகப் பிறந்தார்
4. ஆர் இவர் ஆராரோ
5. சமாதானம் ஓதும் இயேசு கிறிஸ்து
6. வானம் பூமியோ பராபரன் மானிடன் ஆனாரோ
7. ஆமென் அல்லேலூயா
8. வரவேணும் எனதரசே....
9. துதிதங்கிய பரமண்டல...
10. இயேசுவையே துதிசெய்
11. சீர் ஏக நாதனுக்கு ஜெயமங்களம்
12. தேவா இரக்கம் இல்லையோ
13. இயேசு ராஜா எனை ஆளும் நேசா...

14. இயேசு நாயகா வந்தாளும்
15. இம்மட்டும் ஜீவன் தந்த
16. தேவ தேவனே யெகோவா

தஞ்சாவூரில் தற்போதுள்ள நோவா சாஸ்திரியார் அனுப்பித்தந்த புத்தகத்திலிருந்து இக்குறிப்புகள் எடுக்கப்பட்டுள்ளன.


தொகுத்து எழுதியவர்
**திருமதி.கலாவதி பீட்டர்,**
W/o. Rev. PD.பீட்டர்,
திருச்சி – தஞ்சை திருமண்டிலம